## இயல் 2 - புதுமை விளக்கு

**வகுப்பு : 7**

**பாடம் : தமிழ்**

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "இடர் ஆழி நீங்குகவே" - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ..................

**அ) துன்பம்** ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

2. 'ஞானச்சுடர்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ....................

அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் **இ) ஞானம் + சுடர்** ஈ) ஞானி + சுடர்

3. இன்பு + உருகு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ................

அ) இன்பு உருகு ஆ) இன்பும் உருகு **இ) இன்புருகு** ஈ) இன்பருகு

### ஆ. பொருத்துக.

1. அன்பு - தகளி
2. ஆர்வம் - நெய்
3. சிந்தை - இடுதிரி
4. ஞானம் - விளக்கு

### இ. குறுவினா

**1. பொய்கையாழ்வாரும்பூதத்தாழ்வாரும் அகல்விளக்காக எவற்றை உருவகப்படுத்துகின்றனர்?**

பொய்கையாழ்வார் அகல்விளக்காகப் பூமியையும், பூதத்தாழ்வார் அகல்விளக்காக அன்பையும் உருவகப்படுத்துகின்றனர்.

**2. பொய்கைஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டினார்?**

பொய்கை ஆழ்வார் தன் துன்பக்கடல் நீங்க வேண்டிப் பாடலால் மாலை சூட்டினார்.

### ஈ. சிறுவினா

1.**பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.**:

ஞானத்தமிழ் பயின்ற பூதத்தாழ்வார் அன்பையே அகல்விளக்காகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், இனிமையால் உருகும் மனத்தையே இடுகின்ற திரியாகவும் கொண்டு, ஞான ஒளியாகிய சுடர்விளக்கை மனம் உருக திருமாலுக்கு ஏற்றினார்.

### உ. சிந்தனை வினா

**1. பொய்கையாழ்வார் ஞானத்தை விளக்காக உருவகப்படுத்துகிறார். நீங்கள் எவற்றை எல்லாம் விளக்காக உருவகப்படுத்துவீர்கள்?**

நான் அறிவு, தன்னம்பிக்கை, முயற்சி, கடின உழைப்பு, ஊக்கம், கல்வி, உயிர்,

VIJAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KUSAVANPATTY KNOWLEDGE IS POWER

உண்மை ஆகியற்றையெல்லாம் விளக்காக உருவகப்படுத்துவேன்.

## அறம் என்னும் கதிர்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. காந்தியடிகள் எப்போதும் ................. ப் பேசினார்.

அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை **ஈ) வாய்மையை**

2. 'இன்சொல்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது ..............

அ) இனிய + சொல் ஆ) இன்மை + சொல்

**இ) இனிமை + சொல்** ஈ) இன் + சொல்

3.அறம் + கதிர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது ............

அ) அற கதிர் ஆ) அறுகதிர் **இ) அறக்கதிர்** ஈ) அறம்கதிர்

4. 'இளமை ' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ....................

**அ) முதுமை** ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

**ஆ. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. விளைநிலம் | - | இன்சொல் |
| 2. விதை | - | ஈகை |
| 3. களை | - | வன்சொல் |
| 4. உரம் | - | உண்மை |

**இ. குறுவினா**

**1. அறக்கதிர் விளைய எதனை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்?**

அறக்கதிர் விளைய உண்மையை எருவாக இடவேண்டும் என முனைப்பாடியார் கூறுகிறார்.

**2. நீக்கவேண்டிய களை என்று அறநெறிச் சாரம் எதனைக் குறிப்பிடுகின்றது?**

நீக்கவேண்டிய களை என்று வன்சொல்லை அறநெறிச் சாரம் குறிப்பிடுகின்றது.

**ஈ. சிறுவினா**

**1. இளம்வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?**

(i) இன்சொல்லை விளை நிலமாகக் கொள்ள வேண்டும்.

(ii) அதில் ஈகை என்னும் பண்பை விதையாகக் கொண்டு விதைக்க வேண்டும்.

(iii) வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும்.

(iv) உண்மைபேசுதல் என்னும் எருவினை இடுதல் வேண்டும்.

(v) அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும். அப்போது தான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும். - இளம்வயதில் இச்செயல்களைச் செய்ய வேண்டும் என்று முனைப்பாடியார் - கூறுகின்றார்.

**உ. சிந்தனை வினா**

**1. இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கருதுகிறீர்கள்?**

அன்பு, இன்சொல் பேசுதல், உண்மை பேசுதல், களவாமை, புறங்கூறாமை, எளிமை, சிக்கனம், மனஉறுதி, கோபம் கொள்ளாமை, நேர்மை ஆகியன இளம் வயதிலேயே நாம் கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகளாகக் கருதுகின்றேன்.

## உரைநடை - ஒப்புரவு நெறி

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஒருவர் எல்லாருக்காகவும் எல்லாரும் ஒருவருக்காக என்பது .................. நெறி.
   அ) தனியுடைமை ஆ) பொதுவுடைமை இ) பொருளுடைமை **ஈ) ஒழுக்கமுடைமை**
2. செல்வத்தின் பயன் .................. வாழ்வு.
   அ) ஆடம்பர ஆ) நீண்ட **இ) ஒப்புரவு** ஈ) நோயற்ற
3. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை ................ என்றும் கூறுவர்.
   **அ) மருந்து** ஆ) மருத்துவர் இ) மருத்துவமனை ஈ) மாத்திரை
4. உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் ..................
   அ) பாரதியார் **ஆ) பாரதிதாசன்** இ) முடியரசன் ஈ) கண்ணதாசன்

**ஆ. எதிர்ச்சொற்களைப் பொருத்துக.**

1. எளிது - அரிது
2. ஈதல் - ஏற்றல்
3. அந்நியர் - உறவினர்
4. இரவலர் - புரவலர்

**இ. தொடர்களில் அமைத்து எழுதுக.**

குறிக்கோள் - வாழ்க்கை குறிக்கோள் உடையது.

கடமைகள் - ஒரு குடிமகனாக நம் நாட்டிற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளம்.

வாழ்நாள் - வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் குன்றக்குடி அடிகளார்

சிந்தித்து - ஒரு செயல் செய்வதற்கு முன் நன்றாகச் சிந்தித்து செயல்பட வேண்டும்.

## ஈ. குறுவினா

**1. பொருளீட்டுவதை விடவும் பெரிய செயல் எது?**

பொருளீட்டுவதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும் கொடுத்து மகிழ்வதும் ஆகும்.

**2. பொருளீட்டுவதன் நோக்கமாகக் குன்றக்குடி அடிகளார் கூறுவது யாது?**

மற்றவர்களுக்கு வழங்கி மகிழ்வித்து மகிழ, வாழ்வித்து வாழப் பொருள் தேவை என்பதே பொருளீட்டலுக்கான நோக்கமாகும்.

## உ. சிறுவினா

**1. ஒப்புரவுக்கு அடிகளார் தரும் விளக்கம் யாது?**

(i) ஒருவர் செய்யும் செயலானது அது தரும் பயனைவிட, செய்பவரின் மனப்பாங்கு, உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது.

(ii) தரத்தைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுதல் மட்டும் போதாது, உதவி செய்தல் எதற்காக? தற்காப்புக்காகவும் இலாபத்திற்காகவும் கூட உதவி செய்யலாமே!

(iii) சொல்லப்போனால் இத்தகைய உதவிகள் ஒருவகையில் வாணிகம் போலத்தான். அதே உதவியைக் கட்டுப்பாட்டு உணர்வுடன், உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைந்து, உதவி செய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு ஆகும்.

**2. ஊருணியையும் மரத்தையும் எடுத்துக்காட்டிக் குன்றக்குடி அடிகளார் கூறும் செய்திகள் யாவை?**

(i) ஊருணி, தேவைப்படுவோர் அனைவரும் தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு உரிமை உடையது, அதைத் தடுப்பார் யாருமில்லை.

(ii) ஊருணித்தண்ணீர் எடுத்து அனுபவிக்கப்படுவது, பழுத்த பயன்மரத்தின் கனிகளை அனைவரும் எடுத்து அனுபவிக்கலாம்.

(iii) பயன்மரம் பழங்களைத் தருவது உரிமை எல்லைகளைக் கவனத்தில் கொண்டல்ல.

(iv) மருந்துமரம் உதவி செய்தலில் தன்னை மறந்த நிலையிலான பயன்பாட்டு நிலை ஒன்றே காணப்பெறுகிறது.

(v) நோயுடையார் எல்லாரும் பயன்படுத்தலாம். ஒப்புரவை விளக்கப் பயன்படுத்தியுள்ள இந்த உவமைகள் இன்றும் பயன்படுத்தலாம்.

## ஊ. சிந்தனை வினா

**1. ஒப்புரவுக்கும் உதவி செய்தலுக்கும் வேறுபாடு யாது?**

உதவி பெறுபவரை உறவுப்பாங்கில் எண்ணி, உரிமை உடையவராக நினைத்து, உதவி செய்தவதற்குப் பதில் அவரே எடுத்துக் கொள்ளும் உரிமையை வழங்குதல் ஒப்புரவு.

இல்லை என்று கேட்போருக்கு நாமே அவருக்குத் தேவையானதைக் கொடுப்பது உதவி செய்தல். ஒப்புரவில் பெறுபவர் உறவினர். உதவி செய்தலில் பெறுபவர் ஏழைகள் அனைவரும்.

## விரிவானம் - உண்மை ஒளி

**1. 'உண்மை ஒளி' படக்கதையை வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுக.**

### காட்சி -1

**ஜென் குரு :**

குழந்தைகளே! உண்மையான ஒளி எது என்பதைப் பற்றி இன்று அறிந்து கொள்ளப் போகிறோம்.

**மாணவர்கள் :**

அறிந்து கொள்ள ஆவலாக உள்ளோம் ஐயா!

**ஜென் குரு :**

பிறப்பின் அடிப்படையில் எல்லா உயிரும் ஒன்றே. பசி, தாகம், தூக்கம் ஆகியவை எல்லா உயிர்களுக்கும் உண்டு.

மேலும் இரவும் பகலும் மாறி மாறி வருவது போல வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இப்பொழுது உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா? இருள் கலைந்து வெளிச்சம் வந்துவிட்டது என்பதை எந்த நொடியில் நீங்கள் அறிவீர்கள்?

**மாணவன் :**

தொலைவில் நிற்கும் விலங்கு குதிரையா? கழுதையா? என்பதை அடையாளம் காணக்கூடிய நொடியில் வெளிச்சம் வந்துவிட்டதை நான் அறிவேன் ஐயா.

**ஜென் குரு :**

இல்லை. வேறு யாராவது கூறுங்கள் பார்ப்போம்.

**மாணவன் :**

தூரத்திலிருக்கும் மரம் ஆலமரமா? அரசமரமா? என்பதை அடையாளம் காணக்கூடிய நேரத்தில் உண்மையாக விடிந்துவிட்டது என்பதை அறியலாம். சரிதானே ஐயா!

**ஜென் குரு :**

இல்லை. வேறு யாருக்காவது தெரியுமா?

**மாணவர்கள்:**

எங்களுக்குத் தெரியவில்லை ஐயா. தாங்களே கூறி விடுங்கள்.

**ஜென் குரு :**

ஒரு மனிதரைக் காணும் போது இவர் உடன்பிறந்தவர் என்று எப்போது நீங்கள் உணர்கிறீர்களோ, அப்போதுதான் உண்மையான ஒளி உங்களுக்குள் ஏற்படுகிறது என்பது பொருள்.

**மாணவர்கள் :**

இரவும் பகலும் வெறும் கால வேறுபாடுகள் தான். உண்மையான ஒளி உள்ளத்தின் உள்ளே ஏற்பட வேண்டியது என்பதை தாங்கள் புரிந்துகொண்டோம் ஐயா.

**ஜென் குரு :**

உள்ளுக்குள் ஒளி இல்லையென்றால் உச்சி வெயில் கூடக் காரிருளே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். மீண்டும் நாளை சந்திப்போம்.

(வகுப்பு முடிந்து மாணவர்கள் கலைந்து செல்கின்றனர்.)

**காட்சி - 2**

**(குரு அருகில் உள்ள சிற்றூருக்குப் புறப்படுகிறார்.)**

**ஜென் குரு :**

(மனதிற்குள்) இருட்டுவதற்குள் ஊரை அடைய வேண்டும்.

**ஜென் குரு :**

(வழியில்) ஆ! யாரது சாலையோரம் படுத்துக்கிடப்பது. (குதிரையை நிறுத்தி, கீழே இறங்கிய குரு அந்த மனிதனை எழுப்புகிறார்)

**ஜென் குரு :**

குழந்தாய்! எழுந்திரு. நீ யார்? ஏன் இங்கே படுத்திருக்கிறாய்? (மனதிற்குள்) இவன் மயக்கம் அடைந்திருக்கிறான்.

(படுத்திருப்பவனுக்கு நீரைப் பருகத் தருகிறார் குரு.)

**ஜென் குரு :**

குழந்தாய்! எழுந்திரு . இந்த நீரைக் கொஞ்சம் குடி.

(மயக்கமடைந்தவன் எழுந்து உட்காருகிறான்.)

**வழிப்போக்கன் :**

பசியால் மயங்கி விழுந்து விட்டேன் ஐயா. நான் பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டும்.

ASHAYA ACADEMY MATRIC. Hr. Sec. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER

**ஜென் குரு :**

அப்படியா! சரி என்னிடம் குதிரையிருக்கிறது. நான் உன்னை அழைத்துச் செல்கிறேன். (குரு , அவனைத் தன் குதிரையின் மீது உட்கார வைக்கிறார்.)

**ஜென் குரு :**

மெதுவாக ஏறுப்பா! பார்த்து உட்கார். (குதிரையில் ஏறிய அவன் குதிரையை அடித்து விரட்டத் தொடங்குகிறான்.)

**ஜென் குரு :**

ஆ! என்ன இது? ஓ! இவன் திருடன் போல இருக்கிறது. என் குதிரையைத் திருடவே இப்படி நடித்திருக்கிறான். (குரு ஏமாற்றத்துடன் நடந்து ஊரை அடைகிறார்.)

## காட்சி - 3

## இடம் : சந்தை

**ஜென் குரு:**

(மனதிற்குள்) இங்கு எப்படியாவது ஒரு குதிரையை வாங்கிக் கொண்டுதான் ஊருக்குத் திரும்ப வேண்டும்.

**ஜென் குரு :**

ஆ! அதோ அங்கு நிற்பது என்னுடைய குதிரையைப் போல் உள்ளதே (குருவிடம் குதிரையைத் திருடியவன் அங்கு நிற்கிறான். குரு அவன் தோளைத் தொடுகிறார்)

**ஜென் குரு** : குழந்தாய்!

**திருடன்** : ஆ. நீங்களா? (குரு மெல்லச் சிரிக்கிறார்)

**ஜென் குரு** : யாரிடமும் சொல்லாதே !

**திருடன்** : எதை? ஏன்?

**ஜென் குரு** :

குதிரையை நீயே வைத்துக்கொள். ஆனால், இது உனக்கு எப்படிக் கிடைத்தது என்று யாரிடமும் சொல்லாதே.

**திருடன்** :

(மனத்திற்குள்) இவர் ஏமாந்தது யாருக்காவது தெரிந்தால் அவமானம் என்று நினைக்கிறார் போலிருக்கிறது.

**ஜென் குரு** :

நீ நினைப்பது எனக்குப் புரிகிறது குழந்தாய்! ஆனால், நான் ஏமாந்து போனது தெரிந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே யாராவது சாலையில் மயங்கிக் கிடந்தால் கூட அவர்களுக்கு யாரும் உதவ முன்வர மாட்டார்கள்.

புரிகிறதா? குறுகிய தன்னலத்துக்காக நல்ல கோட்பாடுகளை அழித்துவிடக்கூடாது. இதை நீ தெரிந்து கொள்.

## அணி இலக்கணம்

### அ. குறுவினா:

**1. உருவக அணியை விளக்குக.**

உவமை வேறு, உவமிக்கப்படும் பொருள் வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது உருவக அணியாகும்.

**சான்று :** "வையகம் தகழியாக வார்கடல் நெய்யாக" பூமி அகல் விளக்காகவும் , கடல் நெய்யாகவும் உருவகப்படுத்தப் பட்டுள்ளதால், உருவக அணி ஆயிற்று.

**2. உருவக அணிக்கும் ஏகதேச உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

| உருவக அணி | ஏகதேச உருவக அணி |
|---|---|
| இரு பொருள்களுக்கும் உருவகப் படுத்துதல் | இருபொருள்களுள் ஒன்றை மற்றொன்றை உருவகப்படுத்தாமல் வருவது |

## மொழியை ஆள்வோம்

### அ. சரியான வினாச்சொல்லை இட்டு நிரப்புக.

1. நெல்லையப்பர் கோவில் <u>எங்கு</u> உள்ளது?
2. முதல் ஆழ்வார்கள் <u>மூன்று</u> பேர்?
3. <u>எப்படிப்பட்ட</u> சொற்களைப் பேச வேண்டும்?
4. அறநெறிச் சாரம் பாடலை எழுதியவர் <u>யார்</u>?
5. அறநெறிச் சாரம் என்பதன் பொருள் <u>யாது</u>?

### ஆ. பின்வரும் தொடரைப் படித்து வினாக்கள் எழுதுக.

பூங்கொடி தன் தோழியுடன் திங்கட்கிழமை காலையில் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.

(எ.கா.) பூங்கொடி பள்ளிக்கு எப்படிச் சென்றாள் ?

1. பூங்கொடி யாருடன் பள்ளிக்குச் சென்றாள்?
2. பூங்கொடிஎப்பொழுது பள்ளிக்குச் சென்றாள்?
3. பூங்கொடி தோழியுடன் எங்கு சென்றாள்?

இ. தலைப்புச்சொற்களை முழு சொற்றொடர்களாக எழுதுக.

(எ.கா) தலைப்புச்செய்தி : தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடக்கம் - வானிலை மையம் அறிவிப்பு.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கி உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

1. சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவன் - மாவட்ட ஆட்சியர் பாராட்டு.

சாலையில் கிடந்த பணத்தை உரியவரிடம் ஒப்படைத்த மாணவனை மாவட்ட ஆட்சியர் பாராட்டினார்.

2. தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கம் - மக்கள் ஆர்வத்துடன் வருகை.

தமுக்கம் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி தொடக்கியதை அடுத்து, அதைக் காண மக்கள் ஆர்வத்துடன் வருகை தந்தனர்.

3. தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டி - தமிழக அணி வெற்றி.

தேசிய அளவிலான கைப்பந்துப் போட்டியில் தமிழக அணி வெற்றி பெற்றுள்ளது.

4. மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி - ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம்.

மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியில் ஏழாம் வகுப்பு மாணவி முதலிடம் பெற்றுள்ளார்.

5. மாநில அளவிலான பேச்சுப் போட்டி - சென்னையில் இன்று தொடக்கம்.

மாநில அளவிலான பேச்சுப் போட்டியானது சென்னையில் இன்று தொடங்க உள்ளது.

ஈ. கட்டுரை எழுதுக.

## ஒற்றுமையே உயர்வு

**முன்னுரை:**

தனி மரம் தோப்பாகாது. அதுபோல தனித்திருந்தால் வெற்றி கிடைக்காது. ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே உயர்வு கிடைக்கும். சான்றோர் பொன்மொழி 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார் திருமூலர் . பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் திருவள்ளுவர். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்றார் பாரதியார். இப்படிப்பட்ட சான்றோரின் பொன்மொழிகள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

**ஒற்றுமையின் உயர்வு:**

வீட்டில் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் இந்தக் குடும்பம்

உயர்வடையும். அந்தக்குடும்பம் உயர்ந்தால், அந்த ஊர்உயரும், அந்த ஊர் உயர்ந்தால் அந்த நகரமே உயரும். ஒற்றுமையால் அந்த நகரம் உயர்ந்தால் நம் நாடே உயரும். நம் மக்கள் காந்தியடிகளுடன் ஒற்றுமையாகச் செயல்பட்டதால் தான் நமக்கு விடுதலையும் கிடைத்தது.

**ஒற்றுமையின் விளைவு:**

புயல், சுனாமி, வெள்ளப் பெருக்கு, பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது எல்லாம், பல சமூக சேவை அமைப்புகள் ஒன்று கூடி ஒற்றுமையுடன் ஓடோடி மக்களைக் காப்பற்றினர். அதுமட்டும் அல்லாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கி, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்விடங்களை மீண்டும் கட்டமைத்துக் கொடுத்தனர்.

**ஒருமையுணர்வு:**

அல்லா, இயேசு, சிவன் ஆகிய மும்மதக் கடவுள்களும் மூன்றெழுத்தில் ஒன்றுபட்டு நிற்பதைப் பார்க்கும் போது நாம் அனைவரும் ஒன்றுபட்டு மதநல்லிணக்கத்தோடு வாழவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

**முடிவுரை:**

மதம், சாதி, இனம் ஆகிய வேறுபாடு இன்றி மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அப்பொழுது தான் நாட்டில் ஒற்றுமை நிலவும் என்பதை அறிந்து செயல்படுவோம்.

## மொழியோடு விளையாடு

**அ. கீழ்க்காணும் படங்கள் சார்ந்த சொற்களை எழுதுக.**



(எ.கா) கரும்பலகை, வகுப்பறை, பாடப் புத்தகம், மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள்.



(எ.கா.) மரம், நடைபாதை, ஊஞ்சல், சருக்கு மரம், செடிகள்.

**ஆ. கீழ்க்காணும் சொற்களைப் பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லா கவும் தொடர்கள் உருவாக்குக. (விதை , கட்டு, படி , நிலவு, நாடு , ஆடு)**

(எ.கா) விதை - 1. விதை நெல் வாங்கினான். 2. சோளம் விதைத்தான்.

கட்டு - 1. கட்டுச்சோறு உண்டான். 2. வீடு கட்டினான்.

படி - 1. படிக்கட்டில் அமர்ந்தான் 2. நூலைப் படித்ததான்.

நிலவு - 1. நிலவைப் பார்த்தான். 2. கடும் வெப்பம் நிலவுகிறது.

நாடு - 1. நாட்டை நேசி 2. நூலகத்தை நாடினான்.

ஆடு - 1. ஆடு புல் தின்னும் 2. நாட்டியம் ஆடினாள்.

## திருக்குறள்

**அ. சரியான விடையைத் தேர்க.**

1.......................... ஒரு நாட்டின் அரணன்று

அ) காடு **ஆ) வயல்** இ) மலை ஈ) தெளிந்த நீர்

2.மக்கள் அனைவரும் ................ ஒத்த இயல்புடையவர்கள்.

**அ) பிறப்பால்** ஆ) நிறத்தால் இ) குணத்தால் ஈ) பணத்தால்

3.நாடென்ப' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

அ) நான் + என்ப ஆ) நா + டென்பது

**இ) நாடு + என்ப** ஈ) நாடு + டேன்ப

4.கண் + இல்லது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல ..............

அ) கணிஇல்லது ஆ) கணில்லது இ) கண்ணில்லாது **ஈ) கண்ணில்லது**

**ஆ. பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்று வரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
   செய்தொழில் வேற்றுமை யான்.
2. **வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
   யானையால் யானையாத் தற்று.**
3. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
   மிக்காருள் மிக்க கொளல்.

**இ. குறுவினா**

**1. ஒரு செயலைச் செய்ய எவற்றையெல்லாம் ஆராய வேண்டும்?**

பொருள், கருவி, காலம், செயலின் தன்மை, உரிய இடம் ஆகிய ஐந்தும் ஆராய்ந்து அறிந்து ஒரு செயலைச் செய்ய வேண்டும்.

**2. ஒரு நாட்டுக்கு எவையெல்லாம் அரண்களாக அமையும்?**

- தெளிந்த நீர்
- நிலம்
- மலை
- நிழல் உடைய காடு

  - ஆகிய நான்கும் ஒரு நாட்டிற்கு அரண்கள் ஆகும்.

**3. சிறந்த நாட்டின் இயல்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?**

மிக்க பசி, ஓயாத நோயும், அழிவு செய்யும் பகை சேராமல் நல்லவகையில் நடைபெறுவதே நாடு ஆகும். பெரிய அளவில் முயற்சி இல்லாமல் வளம் தரும் நாடே சிறந்த நாடு.

**ஈ. படங்களுக்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக.**



1. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
   காடும் உடையது அரண்.



2. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
   சேராது இயல்வது நாடு.